<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

<u>**STC No.902/2023**</u>

| Deposition of Name | அஜந்தா | Prosecution | DW1 Cross |
|---|---|---|---|
| Father Name | க/பெ.அருண்குமார் | Court | JM Court, Sirkali |
| Village | கொள்ளிடம் | Taluk | Sirkali |
| District | மயிலாடுதுறை | Age | 43/2025 |

Solemnly affirmed by Tmt. R. கீதா., Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

<u>05.02.2026.</u>

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். அவருடைய மகன் சுதர்சன் என்பவரையும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நாங்கள் இருவரும்கொள்ளிடத்தில் ஒரே குடியிருப்பில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். எவ்வளவு காலம் வாதி எனக்கு பழக்கம் என்றால் கடந்த 6 வருடங்களாக பழக்கம். என் கணவர் பெயர் என்ன என்றால் அருண்குமார் என்பதாகும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சென்னையில் தலைமை செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வு அலுவலகத்்தில் இளநிலை உதவியாளராக வேலை செய்கிறேன். என் கணவர் எங்கு வேலை செய்கிறார் என்றால் சென்னை தலைமை செயலகத்தில் உள்ள வருவாய் பேரிடர் மேலாண்மை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக வேலை செய்து வருகிறார்.

எங்களுக்கம் வாதி குடும்பத்தாருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றால் சரிதான். வாதி மகன் சுதர்சன் சிவில் இன்ஜினியரிங் பட்டதாரி என்றாலும் அவர் TNPSC தேர்வுக்கு படித்து வருகிறார் என்றாலும் அதுபற்றி எல்லாம் எனக்கு தெரியாது. சுதர்சனுக்கு நானும் எனது கணவரும் மேற்படி அலுவலகத்தில் பணிபுரிவதால் எங்களுக்கு அதிகாரிகள் தெரியும் என கூறி ரூ.10 லட்சம் வாதியிடமிருந்து பணம் வாங்கியிருந்தேன் என்றால் தவறு. நான் வாங்கவில்லை. 01.10.2022 ல் எங்கள் வீட்டிற்கு வந்து வாதி சுதர்சனும் அவரது

தகப்பனாரும் ரூ.7,00,000/- கொடுத்தார்களா என்றால் இல்லை. வாதியின் மனைவி என்னிடம் ரூ.2 லட்சம் கடன் வாங்கியிருந்தார். அதை தற்போது வரை செலுத்த வில்லை. அதற்கு பிறகு நாங்கள் அவரிடம் கடன் கேட்டிருந்தோம். அதனை 3 தவணைகளாக முதலில் ரூ.3 லட்சமும் இரண்டாவது ரூ.2 லட்சமும், இறுதியாக 2 லட்சமும் என மொத்தம் 7 லட்சம் நாங்கள் கடன் வாங்கியிருந்தோம்.

இதே போல் வாதிக்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வாதியிடம் 15.06.2023 ம் தேதியிட்ட ரூ.7 லட்சத்திற்கான HDFC வங்கியிலிருந்து பெற்ற காசோலை எண். 000124 என்ற காசோலையை கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்தேன். நான் 27.09.2023 ம் தேதியிட்ட எதிரிக்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். அந்த பதில் அறிவிப்பில் ரூ.4 லட்சம் வாதிக்கு நான் கொடுக்க வேண்டிய பாக்கி உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த தொகையை கொடுத்துவிட்டேனா என்றால் 23.12.2023 அன்று ரூ.4 லட்சம் வாதியின் மனைவியிடம் அந்த தொகையை என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்துவிட்டேன்.

புகார்தாரருக்கு G-pay மூலமாக நான் பணம் அனுப்பவில்லை என்றால் சரிதான் எனது கணவர் அனுப்பியுள்ளார். என் கணவருக்கும் புகார்தாரருக்கும் இடையே ஏதேனும் பணம் கொடுக்கல் வாங்கல் இருக்கிறதா என்றால் இல்லை. அவர்களுக்குள் எந்த பண பரிவர்தனையும் இல்லை. என் கணவர் அனுப்பிய பணத்தை கடனுக்கு ஈடாக கழித்துக்கொள்ள வேண்டும் என்று எழுத்துப்பூர்வமாக ஏதேனும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. மயிலாடுதுறை SP அலுவலகத்தில் விசாரணை நடந்தது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். 4 லட்சம் மட்டுமே நான் வாதிக்கு கொடுக்க வேண்டும் என்பதற்கு சான்றாக காவல்துறை அதிகாரி யாரையேனும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. அரசு வேலை வாங்கி தருவதாக 1 கோடி ரூபாய் வரையில் நாங்கள் பல பேர்களிடம் பணம் வாங்கி கொண்டு ஏமாற்றியதாக என் பெயரிலும் என் கணவர் பெயரிலும் கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் குற்ற எண்.200/2023 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நான் கைது செய்யப்பட்டேன் என்றால்

சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அசாஆ.8 ஆன பேப்பர் விளம்பரத்தில் மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட செய்து பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இந்த காசோலை மோசடி வழக்கில் அழைப்பாணை பெற்று 06.11.2023 ல் நான் அஜரானேன் என்றால் சரிதான். நான் 23.12.2023 அன்று பணத்தை திருப்பி கொடுத்தற்கு ஏதேனும் ரசீது அல்லது ஆவணம் உள்ளதா என்றால் கிடையாது. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும் போது நான் வழக்கறிஞர் முன்னிலையில் அல்லது நீதிமன்றம் முன்னிலையில் பணத்தை திருப்ப கொடுக்காமல் எனது வீட்டிற்கு அழைத்து கொடுத்ததாக சொல்வது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல. கள்ளக்குறிச்சி குற்ற எண்.200/2023 காரணமாக எனது வங்கி கணக்கு 12.02.2023 அன்றே முடக்கப்பட்டது என்றால் சரிதான். வங்கி கணக்கு முடக்கப்பட்ட போது நான் எதற்காக வாதிக்கு காசோலை வழங்கினேன் என்றால் எனது கணக்கு 15.03.2023 அன்று DEFREEZE செய்யப்பட்டுவிட்டது அதன் பின் தான் நான் காசோலை கொடுத்தேன். பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கோடுதான் முடக்கப்பட்ட வங்கி கணக்கில் இருந்து நான் வாதிக்கு காசோலை வழக்கினேன் என்றால் சரியல்ல.

முடக்கப்பட்ட கணக்கில் இருந்து காசோலை கொடுப்பது சட்டப்படி தவறு என்றால் எனது வங்கி கணக்கு DEFREEZE செய்யப்பட்டது. DEFREEZE செய்யப்பட்டதற்கு சான்றாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வேலை வாங்கி தருவதாக கூறி பலரிடம் 1 கோடி வரை மோசடி செய்த அதே பாணியில் புகார்தாரரிடம் ரூ.7லட்சம் பெற்றுக்கொண்டு ஏமாற்றுகிறேன் என்றால் சரியல்ல. நான் வேலை வாங்கி தருவதாக சொல்லி ரூ.7 லட்சம் பணமும் அதன்பிறகு புகார்தாரரின் தாயாரிடம் ரூ.3 லட்சமும் மொத்தம் 10 லட்சம் வாங்கியுள்ளேனா என்றால் சரியல்ல. அந்த 3 லட்சத்தை என் கணவர் வங்கி மூலமாக கொடுத்தார் என்றாலும் ரூ.7 லட்சம் தற்போது வரை கொடுக்கப்படாமல் உள்ளது என்றாலும் அதற்காக கொடுக்கப்பட்டது தான் இந்த வழக்கு காசோலை என்றாலும் சரியல்ல. அந்த காசோலை வசூலாகாத காரணத்தினால் நான் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**